A.T.R. 20.
உ: 5806

உ

ஸ்ரீ வடிவாம்பிகா தேவி துணை

# ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்ர
# ஸ்ரீ வடிவாம்பிகா தேவி
# அந்தாதி



வாக்கிலே முன்னேஸ் வரியெழில் சொல்லிட வன்மையிலே
தேக்கும் விழியெழில் கண்டவச் சங்கரன் தேய்ந்துருகிப்
பார்க்கும் பொழுதுடல் பாதியும் ஆயினன் பாரியிவள்
பூக்கும் எழில்முற்றும் காணுகில் மெய்பொய்யாப் போக்குவனே

உ

ஸ்ரீ வடிவாம்பிகா தேவி துணை

ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரம்

# ஸ்ரீ வடிவாம்பிகா தேவி

# அந்தாதி


"சொக்கன்"

வெளியீடு

ஸ்ரீ நிரஞ்ஜனு அச்சகம்

நல்லூர்

25 — 3 — 1977



உ

ஸ்ரீ வடிவாம்பிகா தேவி துணை

# முன்னுரை

## பேராசிரியர். கா. கைலாசநாதக் குருக்கள்

(மனிதவியற் பீடாதிபதி பல்கலைக்கழக யாழ் வளாகம்)

இலங்கா தீபத்தில் 'அலகேஸ்வரம்' என்னும் நாமதேயத்தோடு விளங்குவதென்று ஸ்ரீ சிவமகாபுராணம் ஸனத்குமார சம்மிதையில் எடுத்தோதப்படுவதும், தேவி பீடங்களுள் 'ஸ்ரீலங்காபீட' என வியந்து கூறப்படுவதும் ஸ்ரீ முன்னேஸ்வரமென அநேக ஆராய்ச்சியா ளரும் சமய நூலுணர்ந்த பெரியவர்களும் விதந்து போற்றுகின்றனர்

ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் விஷ்ணுவே முதற் கடவுளெனக்கூறிய வேத வியாசருக்கு அவர் உயர்த்திய கையை நந்திதேவர் அந்நிலையி லேயே நிலைக்கச் செய்தார் எனவும். சாப விமோசனம் கோரிய அவரை ஸ்ரீ முன்னேஸ்வரஞ் சென்று வழிபட்டுச் சாப விமோசனம் பெற வழி காட்டினரெனவும் அவ்வாறே வேத வியாசர் வந்து பூசித்து அருள் பெற்றுச் சாப விமோசனம் அடைந்தார் எனவும் செய்தி உண்டு. இத்தகைய மகத்துவம் வாய்ந்த ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத் திரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி வேண்டுவார் வேண்டுவதை நல்கும் ஸ்ரீ வடிவாம்பிகாதேவி மீது அந்தாதியும் ஸ்ரீ முன்னைநாதர்மீது பதிகமுமாக இரு பிரபந்தங்களைப் பத்திச் சுவை சொட்டவும் அடியார் கள் பாராயணஞ் செய்து அருளைப் பெறவும் ஏற்ற முறையில் வித்து வான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) பீ. ஏ. அமைத்துத் தந்துள்ளார்.

'சொக்கன்' அவர்களின் பணி தொடர்க. அடியார்கள் இந்நூலைப் பாராயணஞ் செய்து அம்பிகையின் அருளைப் பெறுவார்க ளாக.

ஸ்ரீ வடிவாம்பிகாதேவியின் இன்னருள் 'சொக்கன்' அவர்களுக் குக் கிடைக்கும் வண்ணம் பிரார்த்திக்கின்றேன்.

கா, கைலாசநாதக் குருக்கள்

ஸ்ரீ வடிவாம்பிகா தேவி துணை

# வெளியீட்டுரை

ஈழத்தின் பழைமைவாய்ந்த க்ஷேத்திரங்களுள்ளே தலையாயதான ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ வடிவாம்பிகா தேவி மீதும், ஸ்ரீ முன்னைநாதர் மீதும் முறையே அந்தாதியும், பதிகமும் பாடி உதவியுள்ளார் அன்பன் 'சொக்கன்' அவர்கள். ஸ்ரீ வடிவாம்பிகா தேவியைச் சரணடைந்தால் சகல துயர் நீக்கமும், சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும் என்பதால் அவ்வன்னையை வழிபட்டுய்யும் நன்னோக்கங்கொண்டு இப்பிரபந்தங்கள் இயற்றப்பட்டுள்ளன. 'சொக்கன்' அவர்களுக்குச் சகல நலங்களும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

முன்னுரை தந்துதவிய பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களுக்கும், நூல் வெளிவர உதவிபுரிந்த திரு. தி. சண்முகநாதன் அவர்களுக்கும் ஸ்ரீ முன்னேஸ்வரத்து ஸ்ரீ வடிவழகியின் இன்னருள் கிட்டுவதாக

ஜெ. நாகேஸ்வரன்

நிரஞ்ஜனா அச்சகம்,
நல்லூர்

25 - 3 - 77

# முகவுரை

படைப்புக் கடவுளான பிரமதேவர் நைமிசாரணியத்துக் கோமதி யாற்றங் கரையிலே பெருவேள்வி ஒன்று நிகழ்த்தினர். ஒருநாள் அவ் விடத்திற்குச் சூதமா முனிவர் எழுந்தருளியபோது அங்கிருந்த முனிவர் கள் யாவரும் அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். "சுவாமி! முன்னேஸ்வர க்ஷேத்திரத்தின் மகிமையைத் தேவரீர் எமக்குக் கூறி யருளல் வேண்டும்" என்று அவர்கள் வேண்டிக் கொள்ளச் சூதமா முனிவர் அதற்கிணங்கிப் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளினர்.

"கேளுங்கள் முனிவர்களே! இந்தத் திருத்தலம் பிரமதேவரால் அமைக்கப்பட்டதாகும். உலகிலுள்ள எல்லா உயிர்களதும் நன்மை கருதி வழிபடுவதே இதனை அமைத்ததின் நோக்கம். இதன் பெரு மையை இத்துணை என்று எடுத்துரைத்தல் இயலாத காரியம். முன் னேஸ்வரத்தை நினைத்தாலே முத்தி கிட்டும். இதன் மகிமைகள் சில உரைக்கின்றோம், கேளுங்கள்.

அயோத்தி மன்னனான தசரதனின் செல்வப் புதல்வன் இராமன் தன் பகைவனான இராவணனைச் சங்கரித்துச் சீதையோடும் இலக்கும னோடும் விமானத்தில் இவர்ந்து நாடு திரும்பிக் கொண்டிருந்தான். முன்னேஸ்வரத்துக்கு அண்மையில் வந்த காலை அந்த ஆலயத்தின் கோபுரம் தோற்றிய பொழுதே இராவணனைக் கொன்றதால் அவனைத் துரந்து வந்த பிரமகத்தி அவனை விட்டு நீங்கித் தூரச் சென்றது. இதனல் விதிர்ப்புற்ற இராமன் முன்னேஸ்வரத்தில் இறங்கித் திருக் குளத்தில் நீராடி, ஸ்ரீ வடிவாம்பிகாதேவி சமேதரான முன்னைநாதரை மெய்யன்போடு கண்ணீர் வார மெய்ம்மயிர் பொடிப்ப நின்று வழி பட்டான். அது காலை இடபாரூடராய் அவன் முன்பு எழுந்தருளிய பெருமான் இராமனை நோக்கி, "இராமா! உன்னைப் பீடித்திருக்கும் பிரமகத்தி முற்றாக நீங்கவேண்டுமானல் நீ இம்முன்னேஸ்வரத்திலும் கேதீச்சரத்திலும், கோணேச்சரத்திலும சிவலிங்கங்களைத் தாபிப்பா யாக" என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே தாபிதம் செய்து இராமன் பிரமகத்தியின் தொல்லையினின்றும் விடுபட்டான். ஆகவே

முனிவர்களே, மாயவனுற்றிலே மூழ்கி அன்னையோடு அமர்ந்த அப்பனை வழிபடுவீர்களாயின் உங்கள இகவுலகக் குறிக்கோள்கள் யாவும் நிறைவு பெறுவதோடு, சிவபெருமானின் திருப்பாதப் போதுகளை நீவிர் அடைதலும் உறுதி.''

சூதமா முனிவர் தொடர்ந்தார். "முனிவர்களே! இன்னும் கேளுங்கள். காசியிலே நந்திதேவருக்கும் இருடிகளுக்கும் முன்னிலையிலே வேத வியாசர், "விட்டுணுவே யாவர்க்கும் மேலான பரம் பொருள்" என்று தம் கையினை உயர்த்தி அறுதியிட்டுக் கூறிய பொழுது நந்திதேவர், "இவ்வாறு கூறிக் கையுயர்த்திச் சிவாபராதம் செய்து விட்டீர். உமது தூக்கிய கரம் கீழிறங்காது அப்படியே நிற்பதாக" என்று சபித்தார். வேதவியாசர் வருந்திச் சாபவிமோசனம் கோரியபொழுது நந்திதேவர் அவரை, "இலங்கையில் அமைந்த முன்னேஸ்வரஞ் சென்று ஸ்ரீ வடிவாம்பிகாதேவி சமேதமுன்னைநாதரை வழிபட்டால் சாபநீக்கம் கிடைக்கும்" என்று வழிப்படுத்தினரென்றும், அவ்வாறே வியாசர் வழிபட்டு உய்ந்தார் என்றும் அறிந்து கொள்வீர்களாக,''

சூதமா முனிவராலே போற்றி விதந்துரைக்கப்பட்ட முன்னேஸ்வரத் திருத்தலமானது அதன் பழைமை காரணமாகவே அப்பெயர் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. கலியுகத்தின் 512 ஆம் வருடத்தில் சோழமன்னனான குளக்கோட்டன் இலங்கை வந்து கோணேஸ்வரத்தை அமைத்ததோடு. முன்னேஸ்வரத்தின் சிறப்பை அறிந்து அதனைப் புனராவர்த்தனம் செய்து கும்பாபிடேகமும் நிகழ்த்தினன் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னேஸ்வரத்தில வீற்றிருந்தருளும் ஸ்ரீ வடிவாம்பிகாதேவி தனது பெயருக்கேற்ற பேரழகு வாய்க்கப்பெற்றவள். எந்தக் கோணத்தில் நின்று தரிசிப்பினும் புதுக் கவினும், புதுப் பொலிவும் நிறைந்து அருளினை அள்ளிச் சொரியும் இப்பெருமாட்டி இங்கு எழுந்தருளியமை பற்றிய வரலாறு ஒன்றும் அறியத் தக்கது.

முன்னொருகால்; செம்படவன் ஒருவன் முன்னேஸ்வர க்ஷேத்திரத்துக்கு அண்மையிலுள்ள கடலிலே மீன்பிடித்து வந்தான். ஒரு நாள் அவன் அவ்வாறு தன் முயற்சியில் ஈடுபட அங்குச் சென்ற பொழுது கடற்கரையிலே அழகார்ந்த சிறுமி ஒருத்தியும், சிறுவன் ஒருவனும் விளையாடி மகிழுங் காட்சியினைக் கண்டனன். மீனவனைக் கண்டதும் அவ்விருவரும் மறைந்து விட்டனர். செம்படவன் பெருவியப்படைந்து அடுத்த நாளும் குறித்த நேரத்தில் அங்குச் செல்ல அவ்விருவரும் விளையாடுங்காட்சி அவனுக்குப் புலனாயிற்று. அவர்களும் அவனைக் கண்டு மறைய முயன்ற பொழுது அவர்களைத் துரந்து சென்ற அவனின் கையிலே சிக்கிய சிறுமி எழில் பொலியும் விக்கிரகமாக மாறினாள். சிறுவன் மறைந்து போனான்.

இச் செய்தி எங்கும் விரைந்து பரவிற்று. இதனை அறிந்த அரசன் வலைஞனை அழைப்பித்து உண்மையைக் கூறுமாறு கேட்டபொழுது அவன் நடந்தவற்றை விரித்துரைத்து விக்கிரத்தையும் அரசனுக்குக் காட்டினான். அரசனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவன் வலைஞனின் உண்மையைப் பரிசோதிக்க விரும்பி அந்த விக்கிரகத்தைப் போலவே வேறு பலவற்றையுஞ் செய்வித்து அவற்றினிடையே அதனையும் வைத்து அடையாளங் காட்டுமாறு பணித்தான். வலைஞனுக்கு அது கூடவில்லை. அவன் கவலையுடன் வீடு சென்று துயின்றபொழுது கனவிலே தோன்றிய வடிவழகி, "நாளை நீ சென்று விக்கிரகங்களை அடையாளங் காட்டுவாயாக. அவ்வாறு நீ காட்டும்பொழுது எந்த விக்கிரகத்தின் கால்கள் அசைகின்றனவோ அதுவே நான் என்பதை அறிந்துகொள்" எனத் திருவாய் மலர்ந்தருளினாள். அவ்வாறே அவன் அடையாளங் காட்டிய விக்கிரகத்தை அரசன் முறைப்படி முன்னேஸ்வர ஆலயத்திலே பிரதிஷ்டை செய்து வழிபட்டானென்றும் அவ்விக்கிரமே ஸ்ரீ வடிவாம்பிகா தேவியென்றும் உரைப்பர்.

குளக்கோட்டன், ஆறும் பராக்கிரமபாகு, ஒன்பதாம் பராக்கிரமபாகு. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் ஆகிய சிங்கள வேந்தர்களாலும், சென்ற நூற்றாண்டிறுதியிற் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களாலும் புனராவர்த்தனம் நிகழ்த்துவித்துக் குடமுழுக்காட்டப்பட்ட முன்னேஸ்வரத்

திருத்தலமே இலங்கையிலுள்ள சிவ்க்ஷேத்திரங்களுள் மிகவும் பழைமை யானதும். மகிமை வாய்ந்தது என்பதும் சொல்லாமலே போதரும். 1963 ஆம் ஆண்டிலே இவ்வாலய மகாகும்பாபிடேகம் கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநதக்குருக்கள் அவர்களின் தலைமையிலே சிறப்பாக நடந்தது.

ஆண்டுக்கிருமுறை அம்மைக்கும் அப்பனுக்கும் மகோற்சவமும், அம்பாளுக்குச் சண்டி ஹோமமும் பத்தி சிரத்தையுடன் இங்கு நடந் தேறி வருகின்றன. தமிழர், சிங்களர் முஸ்லிங்கள் முதலான எல்லா இனத்தவரும் காந்தத்தை நாடும் இரும்புபோல இங்கு வந்து வழிபட்டு ஸ்ரீ வடிவாம்பிகாதேவியின் திருவருளால் இட்டசித்தி பெற்று உய்ந்து வருகின்றனர்.

இத்தகைய மகிமைகள் பலவும் வாய்க்கப் பெற்ற முன்னேஸ் வரத்து வடிவழகிமீதும், முன்னைநாதர் மீதும் முறையே அந்தாதியும், பதிகமும் பாடுமாறு பிரமஸ்ரீ ஜெ. நாகேஸ்வரன் அவர்கள் என்னை வேண்டிக்கொண்டது எனக்கு வாய்த்த பெரும்பேறெனக்கருதி என் சிற்றறிவுக்கேற்ற வண்ணம் இவ்விரு பிரபந்தங்களையும் ஆக்கியுள் ளேன். 'பித்தர் சொன்னவும் பேயர்கள் சொன்னவும், பத்தர் சென் னவும் பன்னப் பெறுபவோ' என்ற கம்பன் வாக்கினை நினைவுறுத்தி இதனை வடிவழகியின் அடியார்கள் முன்பு சமர்ப்பிக்கின்றேன். நாள் தோறும் இவற்றைப் அவர்கள் பாராயணஞ் செய்து இவற்றின் வழுக்களைந்து பரிசுத்தம் அடையச் செய்யும் வண்ணமும், இவற்றால் ஸ்ரீவடிவாம்பிகாதேவி சமேத முன்னேஸ்வரத்தெந்தையின் அருள் கிட்டும் வண்ணமும் அம்மையை மனமொழி மெய்களால் வழிபடுகின்றேன். இந் நூலுக்கு முன்னுரை வழங்கிக் கௌரவித்த என் ஆசிரியப் பெருந்தகை பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கு நன்றியுடையேன்.

நாயன்மார்கட்டு. | க. சொக்கலிங்கம்

யாழ்ப்பாணம். | (சொக்கன்)

25-3-77.

உ

ஸ்ரீ வடிவாம்பிகா தேவி துணை

# ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திர
# ஸ்ரீ வடிவாம்பிகா தேவி
# அந்தாதி

காப்பு

ஏட்டினிற் பாரதம் மாமுனி சொல்ல எழுதுதற்குன்
கோட்டினில் ஒன்றினைக் கொண்டவ னேயெழிற் குஞ்சரமே!
பாட்டினில் உன்றன தன்னையைப் போற்றப் பரிந்தருள்வாய்
வேட்டைத் திருமடத் தேயமர்ந்தாய் நல்ல விநாயகனே!

நூல்

ஒலிக்கும் பிரணவத் துள்ளொளி யாய்நின் றுணர்வருளி
நலிக்கும் பவப்பிணி நண்ணிடிற் போக்கி நமைப்புரந்து
சலிக்கும் பொழுதெங்கள் சஞ்சலம் மாற்றிச்சந் தானவரம்
பலிக்கும் படிக்கருள் பாவாய் வடிவெழிற் பங்கயமே. 1,

பங்கயச் செம்மலர்ப் பாதங்கள் கொண்டிந்தப் பாரிடத்தே
நங்கையெப் போதுமுன் நாயக னோடு நட மருள்வாய்
தெங்கயற் றோட்டத்திற் செங்கயல் பாய்சீத நீர்த்தடங்கள்
எங்கணும் மல்குறு முன்னேஸ் வரத்தின் எழிற்கொடியே! 2.

எழிற்கொடி எம்முளத் தேபடர் வஞ்சி இளங்கொடியே!
அழற்பட முப்புரஞ் செற்றவன் பாகத் தணைகொடியே!
கழற்படு பேரொலிக் கீடுசெய் நூபுரக் காற்கொடியே!
விழற்படு வாழ்வை விலக்கிட வேயருள் மேலவளே! 3,

மேலவள் நூலிடை மீன்விழி முல்லை விளங்குநகை
பாலவள் இன்மொழி பாதிப் பிறைநுதல் பாற்கலசம்
போலவள் கொங்கைகள் பூத்த புதுநிலாப் போன்முகத்தள்
ஆலமர் தெய்வத் தருந்துணை யாகும் அணங்கிவளே. 4.

அணங்கிவட் காரிணை யாதரித் தாண்டிடும் அன்னையன்றோ ?
குணங்களின் குன்றிவள் கூத்தனும் ஏத்திடுங் கோதையிவள்
இணங்கிடும் நெஞ்சத் திருந்தருள் பாலிக்கும் இன்முகத்தாள்
பிணங்கினுங் காக்கும் பெருந்தகை யாளினைப் பேணுமினே. 5.

பேணுமின் நும்முயிர்ப் பேணிட வெண்ணிலிப் பேதைதிறம்
காணுமின் அன்னையின் காண்டற் கரிய கவினையெலாம்
நாணுமின் தீமைக்கு நன்மைகள் வேண்டுவீர் நாவிடத்தே
தாணுவின் பாதியை ஓதிடு வீர்நலந் தான்வருமே. 6.

வருமே அவள்துணை வாய்ப்பின் இறைநலம் வாய்த்திடுமே
தருமே தனங்கனம் தையலர் காதலும் தக்கவராம்
பெருமே னிலையுடன் பேதைமை போக்கிநற் பேரறிவும்
கருமே கக்குலந் தோற்றிடுங் கைவணக் காரிகையே. 7.

காரிகை நாமமெக் காலத்தும் ஓதுமின் காதலுடன்
பேரிகை கொட்டிப் பெருவிழாக் காணுமின் பெண்மைநலக்
காரிகை நோக்கிக் கடுந்தவஞ் செய்ம்மினக் கையசையின்
பாரிதிற் குன்றமுந் தூசாய்ப் பறந்திடும் பார்த்திடுமே. 8.

பார்த்திடும் போதினில் மாயங்கள் சாலங்கள் பற்பலவும்
ஆர்த்திடும் கிண்கிணி அன்னையே செய்குவள் அற்புதமே
பேர்த்திடும் பொய்ம்மைகள் கீழ்மைகள் நீங்கிப் பிறங்குமின்பம்
போர்த்திடும் உந்தமைப் போற்றிடு வீர்பாதப் போதுகளே. 9.

போதுக ளாமிணைச் சீரடி ஆயிரம் பொற்கதிரென்
றோதுக மாயினும் ஒப்பிடற் கொண்ணு ஒளிநலத்த
ஏதுக ளால்மொழி யாலவள் சீரெழில் ஏதறிவோம்?
வாதுகள் செய்துண்மை நாட்டிட யார்க்குண்டு வல்லமையே? 10.

வல்லமை யற்றவர் வையத்தி லாணவ மாசினராய்க்
கல்லமை தோளர்கள் நாமென மார்பினைக் காட்டிடுவார்
அல்லமை மேனியள் ஆனந்த பைரவி ஆற்றலின்முன்
புல்லென வீழ்குவர் போதம் அடைந்திலர் புல்லியரே. 11.

புல்லியர் ஆழ்நர கத்திடை வீழ்ந்திடப் போதமுணர்
நல்லவர் சத்தியின் பாதநற் போதுகள் நண்ணிடுவர்
பல்லவம் மெல்லவ னுங்கிடு பாதபங் கேருகத்தாள்
வல்லமை முன்னை வடிவாம் பிகைசொல வாக்கிலையே 12.

வாக்கிலை முன்னேஸ் வரியெழில் சொல்லிட வன்மையிலை
தேக்கும் விழியெழில் கண்டவச் சங்கரன் தேய்ந்துருகிப்
பார்க்கும் பொழுதுடல் பாதியும் ஆயினன் பாரியிவள்
பூக்கும் எழில்முற்றும் காணுகில் மெய்பொய்யாப் போக்குவனே 13.

போக்குவ னேயரன் மேனியைப் பாதியாய்ப் பூங்கொர்டியும்
ஆக்குவ ளேயுடற் காருயிர் அன்னவற் கேயளிப்பாள்
சூக்கும மாயண்ட கோளங்கள் யாவினுஞ் சோதியுயிர்
ஆக்கியும் பூரணி யாயிவள் நிற்ப ததிசயமே. 14.

அதிசய அற்புத ஆனந்த வாரிதி ஆதியந்தம்
இதுவென யாரறி வாரிவள் என்றும் இருப்பவளே
பதிசதி யாஞ்சிவ சத்தியென் றேத்துதல் பான்மையிலை
இதயத்தி லொன்றே பரம்பொருள் சத்தியென் றெய்திடுமே. 15.

எய்திடும் ஏழைகள் சஞ்சலம் போக்கி இகத்தினிலே
பெய்திடு மன்பாம் மழையினில் ஆடிப் பெருஞ்சுகங்கள்
பொய்கெடப் பெற்றுப் புகழ்பெறு வீர்எழிற் பூம்பொழிலிற்
கொய்திடு பூவினில் நெஞ்சகப் பூவைக் கொடுத்திமே. 16.

கொடுத்திடும் அன்பினைக் கொள்ளையாய் இன்பங் குவிந்திடுமாம்
எடுத்திடும் அள்ளிப் பருகிடும் விக்கல் எடுத்திடுமேல்
தடுத்திடும் உச்சியைத் தட்டிடுந் தாயின் தயவினுக்கு
விடுத்திடும் நெஞ்சினை வேறுளதோ வெற்றி மேலுறுமே. 17.

மேலுறு காதலிற் சேலுறு கண்களை மேலுயர்த்திக்
கோலுறு மேருவில் வாசுகி நாணுறக் கொண்டுபுரம்
காலறத் தீத்திடு வான்சிவன் தன்னைக் கடைக்கணித்துப்
பாலுறு நற்சுவை போற்கலந் தின்பளி பார்வதியே. 18.

பார்வதி சாம்பவி ராஜரா ஜேஸ்வரி பைரவியே
ஆர்வலர்க் கின்பருள் அம்பிகை கௌரி அருந்துணையே
பார்தனைக் காத்திடும் நாயகி காளி பராபரையே
ஏர்தனக் குன்றிணைய் முன்னேஸ் வரத்தெழில் ஏந்திழையே, 19.

ஏந்திழை பாகத் திருப்பவன் நெற்றிச் சுடரிடத்தே
சேந்தனைத் தோற்றிடச் செந்தழல் போல்நிறச் செம்மலுமே
பூந்தடத் தேவிளை யாடிய போதொன்று செய்தவனை
ஏந்தியே ஆறு முகத்திலும் முத்தங்கள் ஈந்தவளே. 20

ஈந்தவளே அண்டம் யாவையு மங்குள இன்னுயிரும்
போந்தவளே முன்னை யாம்பதி தன்னிடைப் புண்ணியங்கள்
சார்ந்தவளே தமிழ் சிங்கள மக்கள்முஸ் லிங்களெலாம்
காந்தம தீர்த்திடு நல்லிரும் பாக்கிய காரிகையே. 21.

காரிகை பாதந் தொழுதிட வேவந்து காதலுடன்
வாரியைப் போல்மக்கள் சேருதல் கண்டிவ் வனிதையுமே
ஆரியச் சங்கதம் செந்தமிழ் சிங்களம் ஆய்ந்துதரும்
சீரிய தோத்திரப் பாடற் கருளினைச் சேர்க்குவளே. 22.

சேர்க்குவள் சித்தத்தை ஈர்க்குவள் சித்திகள் செய்திடுவாள்
பார்க்கிவள் போலளி நல்கிட வல்லவர் பார்க்கிலிலை
ஆர்க்கும் அருளுமிவ் வன்னையே அன்னை அகிலமெலாம்
மூர்க்கம் தவிர்த்தின்பம் மொண்டனர் எங்களின் முன்னவரே. 23.

முன்னவர் யாவர்க்கும் முன்னவ ளேமுத லானவளே!
அன்னை அருட்கட லேயரன் பாகத் தணைந்தவளே!
கன்னலி னின்னிய சொல்லின ளேகதி காட்டிடுவாய்
மன்னிய முன்னேஸ் வரத்தினில் வாழும் மடவரலே! 24.

மடவர லாங்கங்கை யேறிய மாமுடி மன்னவனும்
அடவர வாகத் தணிந்தவ னுகத்தி லன்பதனுல்
இடவர மீந்த வளேஇம வானின் எழில்மகளே!
கடலனை நீள்விழிக் காரிகை உன்கடன் காத்திடலே. 25.

காத்திட அண்டங்க ளாயிரத் தெட்டையுங் கண்ணிடத்தே
பூத்திடு நல்லருள் பொங்கித் ததும்பிடும் பூங்கொடியே
ஈத்திட வேண்டுமென் றேழையோம் சந்நிதி எய்திநின்றுல்
பார்த்திடு வாய்முன்னை மீதமர் பச்சைப் பசுங்கொடியே 26.

பசுங்கொடி பாலகி யாகினை மீனவன் பாங்கிலுற்று
நிசம்பெறு வார்க்கருள் நீடிட மன்னவன் நெஞ்சிலுற்றுத்
தசும்புறு நற்றன பாரத்தி னுற்றளர் வாய்தளரார்
விசும்புளார் மண்ணுளார் ஏத்திட முன்னை விளங்கெழிலே. 27.

எழிலே எதுவெனில் அன்னை முகத்தொளிர் இன்னெழிலே
பொழிலே உடலெனப் பொங்கும் புதுவெழில் பூண்டிருப்பாய்
ஒழியே லுனதுள உள்ளொளி உள்கி உடனணைந்தோம்,
பழியே லெமையளி செய்திடு பற்றறுப் பாய்பரையே. 28.

பரையே பரம்பொரு ளாகிய பாதாம் புயத்தழகி
விரையே மிகுத்திடு பூக்கொண் டுனதடி வேட்டிடுவோம்
கரையே யிலாப்பவக் காராழி நீங்கக் கருணைசெய்வாய்
உரையே யிறந்திசை ஓங்குமுன் னேஸ்வரத் துத்தமியே. 29.

உத்தமி தாட்சா யணிசோ டசிஅன்ன பூரணியே
வித்தகி ஞானத்து ரூபிணி வேத விழுப்பொருளே
சத்தளி சித்துரு வானதாட் சாயணி சந்ததமும்
பத்தருக் கின்னருள் பாலிக்க நின்றருள் பாலகியே. 30.

பாலகியே யன்று பத்துத் தலையுடைப் பார்த்திவனை
ஞாலமும் விண்ணதும் போற்றவே மாய்த்திட்ட நல்லவனும்
கோலமுஞ் சீலமும் கொண்டவி ராகவன் கும்பிடவே
சால அவன்குறை போக்கிய சங்கரி சாமளையே! 31.

சாமளை யேகதிர்க் ராகன்முனை தாபித்த சத்துருவாம்
ஏமமாலி நல்லிர்ங் கத்தரு கேயம ரேந்திழையே!
கோமள மேயெழில் கொஞ்சிடு மேனிக் குயின்மொழியே!
தேமது ரக்கனிச் சோலைசூழ் முன்னைச் செழுஞ்சுடரே! 32.

செழுஞ்சுட ராயொளிர் செல்வியுன் தெய்வச் சிறப்புகளைப்
பழமரம் நாடும் பறவைக ளொத்துநாம் பற்றிநிதம்
அழுதிடு வோம்பாடி ஆர்த்திடு வோமகம் நைந்துருகித்
தொழுதிடு வோந்துயர் புற்பனி யாகத் தொலைந்திடுமே. 33.

தொலைந்திடுந் தீமை எழுந்திடுஞ் ஞானந் துகளறுமே
அலைந்திடும் புன்மை அடங்கிடும் அன்பதும் ஆர்த்தெழுமே
மலைந்திடும் ஆணவம் மாய்ந்திடும் மாயை மறுகிடுமே
குலைந்திடு மேகக் குழற்கனி நெஞ்சிற் குறித்திடினே. 34.

குறித்திடு கொள்கைக் கோவர ராமன் குலத்தொளியாம்
உறைத்திடு சிந்தைக் குளக்கோட்ட னென்னுமோர் உத்தமனும்
நிறைத்திடு மன்பின ருகிமுன் னுலயம் நீடுபெற
இறைத்துணை சோரா தியற்றின னற்பணி இன்னமுதே. 35

இன்னமு தேபின ராரும்ப ராக்ரமன் ஏற்றபணி
உன்னுவ மாயின் உயர்ந்ததென் றேயுளத் தோர்ந்திடுவோம்
மன்னவன் கீர்த்திகொ ளிராசசிங் கேறும் மகிழ்ச்சியுடன்
பன்னருந் தொண்டுக ளாற்றிநின் அன்பிற் படிந்தனனே. 36.

படிந்தன மாயவ னுறளி நீர்க்குளம் பாங்குடனே
மடிந்தன குன்றனை மாயை யிழைத்திட்ட மாயமெலாம்
கடிந்தனங் காம வெகுளியென் றின்னன காலறவே
விடிந்தன வாழ்வுகள் மெய்ம்மையும் மேலாய் விளங்கிடுமே. 37.

விளங்குஞ் ஸ்ரீசக்ர மீதொளிர் ஞான விழுப்பொருளே!
துளங்கும் உடலினில் துங்கமார் நல்லருள் தோய்ந்தவளே!
களங்குறு காய்நிறக் கார்முகி லேகந்தத் தாரணிவோய்!
இளங்கிளை யாய்த்திரு வாணியை யேற்றரு ளெம்முதலே! 28.

எம்முத லாகி இலகிடுவாய் சத்தி ஈறறியாய்
தம்முத லென்றுநால் வேதமுழங்குதாட் சாயணியே!
பம்மு மிருந்தன பாரத்தி னுய்கன்னல் பாரத்தருள்
எம்மவ ளேலலி தாம்பிகை யேயுனை ஏத்துவமே. 39

ஏத்துவ மாயிரப் போதுள தாமரை ஏற்றருளும்
பூத்த மலர்முகப் பொன்னவிர் மேனிப் பொலிவழகைக்
காத்திட வேகலை யேட்டினைத் தாங்கிக் கரத்தினிலே
சீர்த்திடு நற்செப வாரச் சிறுமியைச் சேர்குவமே. 40.

சேர்குவ மேகாற்றில் வேகமாய்ச் சென்றிடுஞ் சீர்பரியில்
ஊர்குவ ளாகிய அஸ்வரு தாவினை உண்மையுடன்
தேர்குவ மிவ்வுல கெங்கணும் பாலித்துத் தீப்பசியை
நேர்குவ ளேயன்ன பூரணி யாகிய நேரிழையே. 41.

நேரிழை உச்சியிற் றாமரை நீண்மதி நேரரிய
தாரிழை செம்மைப் பசுங்கிளி தோளதிற் றாங்கியவள்
வாரிழை கச்சினள் வீணையள் வானத் தமுதனையாள்
ஓரிழை போலும் நுடங்கிடை ராஜமா தங்கியளே. 42

தங்கிய தாமரைப் போதினள் தண்ணளி யாள்நுதலில்
பொங்கிய நல்லரு ளேவிழி யாகப் பொலிமுகத்தள்
எங்கணு மேத்து கலைத்திற வேடெழுத் தாணியுடன்
சிங்க மெனத்திகழ் வாக்வா கினியாஞ் செழுஞ்சுடரே. 43.

செழுஞ்சுட ராம்பரை சத்துசித் தானந்தச் சேர்க்கையினுள்
தொழுந்தொறுந் தூய்மனத் தொண்டர்தம் துன்பம் துடைத்திடுவாள்
விழுந்தொறுந் தாயெனக் கைம்மலர்த் தாங்கும் விழுமியவள்
அழுந்தொறுங் கண்ணீர் துடைத்திடும் அன்பின் அணங்கிவளே 44.

அணங்கிவ ளேன முகத்தினள் எட்டெனுங் கையுடையாள்
பிணங்கு மனத்திருள் போக்கும் வராகி பிறைநுதலாள்
உணங்கு மனத்தினர் உள்ளொ ளிராத்திற வுண்மையினுள்
பணங்கொள் அரற்கருள் இன்பப் பறையிசை பாடுமினே. 45.

பாடுமின் நூற்புரு டார்த்தமு முற்றுப் பரிந்துகளித்
தாடுமி னும்புவ னேஸ்வரி தாளிணை தாங்கிடுவீர்
கூடுமின் விண்ணவர் கோவென் றமுதிடக் குன்றனையாள்
பீடுறு சிங்கம தேறி மகிடன்சீர் பேர்த்தனளே. 46.

பேர்த்தவள் தீமைகள் சிங்கே றமர்ந்தவள் பீடுடையாள்
ஆர்த்த துயர்க்கடற் காதவன் வாழ்விற் கரும்புணையாம்
சீர்த்தவர் நெஞ்சினைச் சிங்கா சனமெனச் சேர்ந்திடுவாள்
கூர்த்த மதித்திறல் கொண்டணை யேலிந்தக் கோதையையே. 47.

கோதையைச் சண்டியைக் குன்றெறிந் தானின் குலமுதலை
மாதவர்க் கின்பினை மாயிருண் ஞால மணிவிளக்கை
யாதவன் சோதரி யாளினை ஏத்திடும் யாவரையும்
போதகர் என்றவர் பாதநற் போதுகள் போற்றிடுமே. 48.

போற்றிடு வீர்முன்னை புக்கிருந் தாள்பிடிப் போதகத்தை
மாற்றிடு வீர்விதி மாய்வினில் நீங்கி மகிழ்ந்திடுவீர்
எற்றிடு வீரவள் பாதங்கள் உம்முளத் தேற்றிடிலோ
காற்றிடு மூச்சினி ஏனுமக் கன்னையின் காப்புளதே. 49.

காப்புள தென்றுன்னி முன்னையின் தேவியின் கால்பிடித்துத்
தீப்புக் கழிகின்ற விட்டிலைப் போற்செகத் தீமைகளை
நாப்புக் குரைத்தும் நயந்து மிழிவினை நண்ணுகிலீர்
ஓர்ப்புக் குரியதவ் வுத்தமி பேறென் றொலித்திடுமே. 50

# பிழைதிருத்தம்

| பிழை | திருத்தம | பக்கம் | பாட்டு | வரி |
|---|---|---|---|---|
| பூங்கொர்டியும் | பூங்கொடியும் | 9 | 14 | 1 |
| கதிர்க்ாகான்முளை | கதிர்க்கான்முளை | 12 | 32 | 1 |
| ஏமமாலி நல்லிர்ங்கத் | ஏமமார் நல்லிலிங்கத் | 12 | 32 | 2 |
| கடிநதனங் | கடிந்தனங் | 13 | 37 | 3 |
| குனித்திடு | குறித்திடு | 13 | 35 | 1 |

பதிகம்

| பிழை | திருத்தம | பக்கம் | பாட்டு | வரி |
|---|---|---|---|---|
| சிங்றேு | சிங்கேறு | 3 | 4 | 1 |
| முந்திக்கு | முத்திக்கு | 5 | 8 | 11 |
| உள்னத்தி | உள்ளத்தி | 6 | 10 | 3 |

உ

ஸ்ரீ வடிவாம்பிகா தேவி துணை

ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரம்

# ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி

# பதிகம்

"சொக்கன்"

25 – 3 – 1977

உ

ஸ்ரீ வடிவாம்பிகை துணை

# ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்ர

# ஸ்ரீ வடிவாம்பிகா சமேத

# ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி - பதிகம்.

## காப்பு

மண்ணு றறியா மதியிலிக்கு மாபெரிய
விண்ணு றளிக்கின்ற வேதியனைப் — பண்ணுறு
காட்டுங் குரவர் கவிஞற்றிற் பாடவருள்
கூட்டுங் கரியகத்தே கூடு.

## நூல்

பேராழி தன்னிடை நித்திலம தென்னவே
பிறங்கிநின் றொளிகான் றிடும்
பேறுடைய நல்லீழ தீவதின் மேற்கினிடை
பெருமைசேர் சிலாப நகரில்
சீராழி யென்னவும் பேராழி யென்னவும்
திகழ்தரும ஆழி எனவும்
சிவனென்று முன்னவன் பின்னவனு மென்றுமே
தெளிவுளார் பரவ நின்று
போராழி யாம்பிறப் பெண்ணரிய கொண்டுநாம்
புன்மையுற அருளி னலே
பொய்யாகு மெய்யினைப் போக்கியின் பருளுமொரு
போதனே ஞான பரனே!
காராழி மேனியிரு கூராழி விழிகொண்டு
கன்னியா யுலக மீனும்
கவினுரு மலையவன் கதியாக வருகனியின்
கணவனே! முன்னை அரசே! (1)

ஆழியின் கரையினிடை அன்றுநீ சிறுவனாய்
அம்மையுஞ் சிறுமி யாகி
ஆடல்பல அருளிடும் போதினில் அணைந்துமே
அக்காட்சி கண்ட வலைஞன்
பாழினைப் போக்குமொரு பக்குவம் வந்ததோ
பகரீழ மோங்க வேயோ ?
பற்றியே சிறுமியைக் கையகங் கொண்டனன்
பாவை விக்ரக மாயினாள்.
ஈழமதன் மன்னனும் இதன்உண்மை கண்டிட
எண்ணியோன் பலவிக் ரகம்
இவற்றினிடை யதைவைத்துத் தேரென்ன மீனவன்
எழிலியின் கருணை யாலே
வேழத்தி னன்னைசிலை காலசைவு கொண்டுமே
வேறுசெய் தது காட் டினான்
வேந்தனும் கோவிலிற் சேவித் தனன்அவளின்
வேறிலாய் முன்னை அரசே ! (2)

சுடராகி விண்ணிலே ஏழ்பரியு கைத்துமே
சூழிருளை நீக்கி யுலகின்
துயர்களை கின்றவொரு சூரியன் குலத்தினிடை
துகளிறுத் தெழுந்த கோவாம்
அடலேறு வரராம தேவனின் புதல்வனாய்
அழகுபெறு சோழ நாட்டில்
அவதரித் திட்டநற் குளக்கோட்டன் என்கின்ற
அரசனிவ் வீழ நாட்டில்
திடமாக வீற்றிருந் தருளுநின் கோயிலில்
திருப்பணிகள் பலசெய் தனன்
தெய்வமே! உன்றனுக் கணிபெறுதல் லாலயந்
திருத்தியே உய்வு கண்டான்
மடலேறு கொன்றையும் விடமேறு கண்டமும்
மன்னியெழில் கொள்ளு மிறையே !
மாதான வடிவழகி யோடினி தமர்ந்தருள்
மாதேவ ! முன்னை அரசே! (3)

வானேறு சிங்றே தானேறு துவசமுடன்
வளர்கின்ற புகழு மேற
வையந்தனிற் பெயரை எய்வின்றி யேநிலே
வைத்திட்ட மன்னர் மன்னன்
தேனூறு தார்மார்ப ஞரும்ப ராக்ரமன்
செய்தபணி சொல்ல வசமோ ?
திகழிசையி னென்பதாம் பராக்ரமனு மிங்ஙனே
திருப்பணிக ளாற்றி யுய்ந்தான்
ஊனூறு மாணவ விருள்கடிக லுன்னியே
உயர்கீர்த்தி ராஜ சிங்கன்
உன்னடித் தொழும்புகள் பலப்பல வியற்றியே
ஓங்குநல் வீடடைந் தான்
கானேறு சிங்கமமர் தேனூறு சொல்லழகி
கவினூறு வடிவாம் பிகை
காதலில் அணைந்தமுலே வைத்துப் பதித்தகுறி
காண்மார்ப ! முன்னே அரசே ! (4)

வேதமோ டாகமம் மெய்யான இறைநூல்கள்
மிகுதியுங் கற்று யர்ந்தார்
வேதனின் மறுபிறப் பென்னவே வந்தவர்
மிக்கவே பத்தி யுடையார்
ஓதுநற் புகழாளர் உன்னதக் குருதேவர்
உயர்கு மாரஸ் வாமியார்
உன்னதநன் முறையினிற் பன்னுமக வன்புடன்
ஒளிகொள்நற் குடமு ழுக்கை
நாதனே உன்றனுக் காட்டினர் நன்மைபல
நங்களுக் கமைய வுய்த்தார்
நாளுமெமை யுன்னருளே நாடற்கு வைத்தனர்
நாங்களினி உய்ந்து விட்டோம்
சீதநீர் சூழ்தடம் செய்கள்நிறை பழனங்கள்
சீராரு மாட வீதி
செறிகின்ற பதிதன்னிற் கொடியிஞே டுறைகின்ற
சேவகா முன்னே அரசே! (5)

வெண்மதியொ டிதழியர வென்னுமிவை கங்கையொடு
வேணியதி லிலக வென்றும்
வீறுபெறு நீறதுவு மேனியினி லேயிலக
வெந்நெருப் பொளிக ரந்து
தண்ணளிசெய் முறுவலொடு மெண்ணரி யஉலகங்கள்
தாளிணைக்ள் போற்ற நின்று
தாவறுமிவ் வுலகுயிர்கள் ஓய்வறநின் றளிசெயுந்
தாதையே ! தேவ தேவா !
பண்ணிசையு மொண்ணுமோ என்னமொழி பகர்கின்ற
பாதியுடற் குரிமை கோரும்
பர்ங்கான வல்லியணை ஓங்கார உட்பொருட்
பரஞ்சோதி ! நாத பரமே !
எண்ணரிய பழனமோ டெங்கணுந் தெங்குசெறி
ஏழில்சூழ வான ரங்கில்
இலகுமுகில் கண்டு பொழில் மயிலாடுஞ் சோலையுறை
எந்தையே ! முன்னை அரசே ! (6)

காட்டைச் சுமந்தகுழல் ஈட்டிக் குயர்ந்தவிழி
கமலமும் வெஃகு வதனம்
காணுத எழில்முல்லை நாணுகுமு றுவலைக்
கண்டாரின் உள்ளொளிரு வாள்
பாட்டிற்கு கந்தபுகழ் ஏட்டிற் களித்ததிறல்
பற்பலவு மொன்ற மைந்த
பச்சைக்கிளி பரமனிச் சைக்கிளி எழிற்
பாவைமுலை கொண்டு காதல்
ஊட்டிக் குழைந்துமகிழ் வேட்கைக் குக்ந்தவா
உள்ளத் தினுள் நின்றவா !
ஓவர்மல் உன்பெயரை உன்னுமல் ஒருபோதும்
உன்னடிக் கன்பு செய்யார்
மாட்டிக் கொடுங்கூற்று வாட்டித் திரிந்திடில்
மனமாள்கி உடல் மாள்குவார்
மாண்பான நல்லமரர் மற்றவரும் ஏத்துமொரு
மாதேவ முன்னை அரசே ! (7)

மாலோடு நான்முகனு முன்னுண்மை காணவே
　　மாதவம் பலசெய் குவார்
மாலான இந்திரன் மற்றுமுள மாதவர்
　　மன்னனின் அருள்வேட் குவார்
காலொடு நலக்கினி நமனோடு வருணனும்
　　கனதேவர் அடிநண் ணுவார்
காதலுற் றுனதுபேர் ஓதலுற் றிவரெலாம்
　　கண்ணியம் பெற்றுய் குவார்
பாலமுதை யொத்த தமிழ் மீதுற்ற காதலன்
　　பாலகண் செய்ய முருகன்
பற்றுக்க ளோட்டிநித முந்திக்கு நல்லருள்
　　பாலிக்கும் வேழ வதனன்
ஆலமமு தாக்கினாய் அவரெலாம் நீயாதல்
　　அறிந்துன்ற னடிபற் றினோம்
ஐயனே துய்யவருள் மெய்யனே ஆனந்த
　　ஆதியே முன்னை அரசே! 8

வானோங்கு தருக்களின் மீதோங்கு தழையெனும்
　　வண்டூரி கைகொண் டுமே
வான்மீது படிகின்ற முகிலென்ற தூசினை
　　வற்றத் துடைக்க ஆங்கே
தானோங்கி வளர்கின்ற தண்மதியு மஞ்சியே
　　தன்னை மேகத் தொளிக்கும்
தாங்காத துன்பமோ டச்சமும் மீதூரத்
　　தாரகைக் கூட்ட மாள்கும்
மானோங்கியே பாய்ந்து தீயினிடை விழாது
　　மதிகொண்ட கைய னீயோ
மானாகும் உமைமீது கண்பதித் திருந்திடுவை
　　மங்கையும் உனைநோக் குவாள்
நானோங்கு நெஞ்சினர் மேலாங்கு மருளினால்
　　நாளுமே ஞான மீந்து
நல்லாறு காட்டுமோர் தொல்லா றமைத்தவா
　　நாதனே முன்னை அரசே ! (9)

ஒருவனே யெனவுன்னை ஒருவார் பின்னிருவர்
உளரென்று சத்தி பேதம்
ஓதுவார் மூவரென உன்னத்தி லெண்ணிடுவர்
உன்றெழில் நினைந்துய் குவார்
பெரியனே என்றிடுவர் அணுவினும் நிற்குமுனைப்
பின்னர்நற் சிறுவ னென்பார்
பேதமில் நெஞ்சிலார்க் கரியனே உன்றனைப்
பேரடியர் எளிய னென்பார்
கரிமுகன் என்னுவார் அறுமுகனு மாக்குவார்
கன்னியென அம்மையென வைப்பார்
கர்தலால் இவர்கூறும் மொழியெலாங் கேட்டவர்
கருத்தினை முடித்து வைப்பாய்
பரியேறி வந்துநரி பரியாக்கி விட்டவா!
பத்தர்கட் கடியனே பரனே
பரையவளி னுரையிறந் தொழுகு மெழில்பரு குமவள்
பாங்கனே முன்னை அரசே ! (10)

**தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்ச மில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே.**

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கரும்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.

அபிராமி அந்தாதி

300.358